இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 23 ISSUE 08 AUGUST-2023 | ஆண்டு சந்தா 100/- தனிப்பிரதி 10/-



# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். **நாகூம் 1:7 சொல்லுகிறது கர்த்தர் நல்லவர், இக்கட்டு நாளிலே அரணான கோட்டை, தம்மை நம்புகிறவர்களை அறிந்திருக்கிறார் என்று சொல்லப்பட்டுள்ளது.** அவரை நம்புகிற அத்தனை பேருக்கும் அரணான கோட்டையானவர் என்று வேதம் சொல்லுகிறது. இந்த நாட்களில் அவர், நமக்கு அரணான கோட்டையாக இருந்து, ஆசீர்வதித்து நடத்துவார். தேவனுடைய பெரிதான கிருபையினால் ஒவ்வொரு மாதமும் செம்பட்டி வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெபமையத்தில் வைத்து இரண்டாவது வெள்ளிக்கிழமை மற்றும் இரண்டாவது சனிக்கிழமைகளில் நடைபெறும் உபவாச ஜெபத்தையும், மதுரை பட்டணத்தில் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது சனிக்கிழமை நடைபெறும் எழுப்புதல் உபவாச ஜெபத்தையும் தேவன் ஆசீர்வதித்து வழிநடத்தி வருகிறார். இந்த ஜெபங்களில் புது புது ஜனங்கள் வந்து கலந்து கொண்டு தேவனால் தொடப்படுகிறார்கள், இரட்சிக்கப்படுகிறார்கள். கர்த்தருக்குச் சித்தமானால் **ஆகஸ்டு 15-ஆம் தேதி** செவ்வாய்கிழமை அரசு விடுமுறை அன்று நமது செம்பட்டி வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெபமையத்தில் வைத்து **ஆசீர்வாத உபவாச ஜெபம்** நடைபெறுகிறது. இதில் தேவசெய்தி மற்றும் ஜெபம் **FR. பெர்க்மான்ஸ்** அவர்கள், இந்த ஜெபம் காலை 9:30 மணிமுதல் மதியம் 2 மணிவரை நடைபெறும். இந்த ஜெபத்தில் நீங்கள் யாவரும் கலந்து கொள்ள இயேசுவின் நாமத்தில் அன்போடு அழைக்கிறோம். நம்முடைய தேசத்தில் கர்த்தருடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு பரவவும், சுவிசேஷத்திற்கு விரோதமாக செயல்படுகிற பிசாசின் தந்திரங்களும், மனிதர்களுடைய சூழ்ச்சிகளும் முறியடிக்கப்பட கருத்தாய் ஜெபிப்போம். இது நாம் தேவனுக்காக செயல்படுகிற காலம். தொடர்ந்து திங்கள் முதல் வெள்ளி வரை இரவு 9 மணிக்கு ஒளிபரப்பாகிற **கர்த்தாவே என்னை கைதூக்கி விடும்** என்ற நிகழ்ச்சியையும், காலைதோறும் **இயேசுவை தினம் பார்ப்போம்** என்ற நிகழ்ச்சியையும், மாதத்தின் கடைசி நாள் இரவில் (10:30 - 12:30) ஒளிபரப்பாகும் **நம்பிக்கையின் இரவு** என்ற நிகழ்ச்சியையும் நீங்கள் தவறாமல் பாருங்கள், மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். உணவுப் பொருட்களின் விலைவாசி உலகம் முழுவதும் ஏறிக்கொண்டே போகிறது, கர்த்தர் எல்லா தேசங்களிலும் ஆசீர்வாதமான மழையை பெய்யப்பண்ணவும், நல்ல விளைச்சலைத் தரவும், அவைகள் சேமிப்பு கிடங்குகளில் பாதுகாத்து வைக்கப்படவும் கருத்தாய் ஜெபியுங்கள். தொடர்ந்து உங்கள் ஜெபத்தாலும், உற்சாகமான காணிக்கைகளினாலும் இந்த ஊழியத்தைத் தாங்க மறவாதிருங்கள். தேவனுடைய மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.



*இயேசுவின் பணியில்,*

L. Vincent Raj

(சகோ.L.வின்சென்ட்ராஜ்)


செம்பட்டியில்
இயேசுவின்
பாதத்தில்
ஆகஸ்ட்
11,12
வெள்ளிக்கிழமை சனிக்கிழமை
@09:00Am
ஆசீர்வாத
உபவாச
ஜெபம்
ஆகஸ்ட்
15
அரசு விடுமுறை
செவ்வாய்க்கிழமை
@09:00Am
Fr. Berchmans
Bro. L. Vincentraj
Sis. Kala Vincent Raj
இடம்
வானத்தின் வாசல், எழுப்புதல் ஜெப மையம்
செம்பட்டி, திண்டுக்கல்
வந்து பாருங்கள் !! இயேசு அற்புதம் செய்கிறார் !!
தொடர்புக்கு 94428 00449, 94980 00449



# நீ மண்ணாயிருக்கிறாய்

சகோ. L. வின்சென்ட்ராஜ்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த செய்தியின் மூலம் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இன்றைக்கு நாம் வாழும் இந்த விஞ்ஞான உலகில் மனிதன் கொடி கட்டி பறக்கிறான். சந்திர மண்டலத்திற்கு போனேன், வான மண்டலத்திற்குப் போனேன் நான் செய்யாத காரியம் இல்லை, நாங்கள் கண்டுபிடிக்காத காரியம் இல்லை, அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்கிறார்கள். நாங்கள் பூமியின் எல்லையைக் காட்டிலும் உயர்ந்தவர்கள். நாங்கள் அசூர வேகத்தில் வளருகிறவர்கள். எங்களை மேற்கொள்ள ஒருவனும் இல்லை என்று தலைக்கு மேல் ஆணவத்தில் கொடிகட்டிப் பறக்கிற இந்த உலகத்தில், கடந்த சில வருஷங்களாக உலகம் முழுவதும் ஏற்பட்ட கொடிய கொள்ளை நோய் (கொரோனா) முழுஉலகத்தையும், மனிதனுடைய அறிவுக்கும், அகந்தைக்கும் ஒரு பெரிய முற்றுப் புள்ளியை வைத்தது. குதிரைக்கு மூக்கனாங் கயிறு போட்டது போல தேவன், மனிதனுடைய அறிவுக்கும், அகந்தைக்கும் மூக்கனாங்கயிறு போட்டு அறிவுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தார்.

இன்றைக்கு இந்த செய்தியை வாசிக்கிற ஒவ்வொருவரும், மனிதன் எங்கிருந்து தோன்றினான், எங்கிருந்து வந்தான் என்பதை அறிந்து கொண்டால், சற்று ஆட்டம், பாட்டம் எல்லாம் குறைந்து தன்னைக் படைத்த, உண்டாக்கின தேவனுக்கு முன்பாக பயபக்தியாக இருப்பான் என்பதை நம்புகிறேன். தேவன் மனிதனைப் படைப்பதற்கு முன்பாக, சிருஷ்டிப்பதற்கு முன்பாக தூதர்கள் உலகமாயிருந்தது. அதிலே மூன்று முக்கியமான தூதர்கள் இருந்தார்கள்.

மிகாவேல், காபிரியேல், லூசிபர் என்று மூன்று பேர். லூசிபர் என்ற தூதனை, தேவனை ஆராதிக்கவும், தேவனை மகிமைப்படுத்தவும் ஏற்படுத்தி வைத்திருந்தார். மற்ற இரண்டு தூதர்களும் தேவன் தங்களுக்கு கட்டளையிட்ட யாவற்றையும் சரியாய் செய்து கொண்டிருந்தார்கள். அதாவது தேவன் கொடுத்த வேலையை கவனமாய் நேர்த்தியாய் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் லூசிபர் என்ற தூதன் மட்டும் அகந்தை, பெருமை அடைந்து தேவனுக்கு விரோதமாய் பெருமை கொண்டு தனக்கு என்று, தன்னைத் தொழ, ஆராதிக்க ஒரு கூட்டத்தை, தூதர்களை தன் பக்கமாய் திருப்பினான் என்று வேதம் சொல்லுகிறது.

எசேக்கியேல் 28-ஆம் அதிகாரத்தில் 14 முதல் 17 வரை நீ, காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணுப்பட்ட கேரூப். தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன். அக்கினிமயமான கற்களின் நடுவே உலாவினாய், நீ, சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவக்கி உன்னில் அநியாயம் கண்டு பிடிக்கப்பட்டது மட்டும், உன் வழிகளில் குறையற்றிருந்தாய். உன் வியாபாரத்தின் மிகுதியினால், உன் கொடுமை அதிகரித்தது. நீ, பாவஞ் செய்தாய், ஆகையால் நான் உன்னைத் தேவனுடைய பர்வதத்திலிருந்து ஆகாதவனென்று தள்ளி, காப்பாற்றுகிற கேரூபாய் இருந்த உன்னை அக்கினிமயமான கற்களின் நடுவே இராதபடிக்கு அழித்துப் போடுவேன் என்றார். வான மண்டலத்தில் இருந்த அந்த கேரூப் தூதனை தேவன் பூமியின் மண்ணிலே தள்ளிவிட்டார். அது தேவனுடைய தண்டனை, சாபமாக இருந்தது. இயேசு சொன்னார் லூக்கா 10:18-ல் சாத்தான் மின்னலைப் போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன் என்றார்.



அவன் சபிக்கப்பட்டு கீழே விழுந்து அக்கினி கடலிலே, மண்ணிலே தள்ளப்பட்டான். அந்த மண் அவன் நிமித்தம் சபிக்கப்பட்டிருந்தது. **2 பேதுரு 2:4-ல் பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி, நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்தார் என்று சொல்லப்பட்டுள்ளது.** இப்படி லூசிபர் தூதன் பாவம் செய்து தள்ளப்பட்ட போது, அவன் இருந்த இடத்தில் அவன் காரியத்தை செய்ய, தேவனை துதிக்க, ஆராதிக்க அந்த வாய்ப்பை தேவன் மனிதர்களுக்குக் கொடுத்தார். **ஏசாயா 43:21-ல் இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன், இவர்கள் என் துதியைச் சொல்லி வருவார்கள் என்றார்.** இப்படி துதிக்கவும், தேவனைக் கனம் பண்ணவும் களிமண்ணினாலே, பிசைந்த மண்ணினாலே மனிதனை உண்டாக்கி, அப்படி பிசைந்த களிமண்ணிலே தம்முடைய சுவாசக் காற்றை ஊதினார். உயிர் மூச்சை அவன் மேல் ஊதினார். அப்பொழுது மனிதன் உயிருள்ளவனாக மாறினான். **ஆதி 2:7-சொல்லுகிறது தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்.** நாம் மண்ணிலிருந்து வந்தவர்கள், மண்ணுக்கே திரும்ப வேண்டும் என்பது தேவனுடைய நியமம்.

இந்த மண்ணான சரீரத்திலே தேவனுடைய சுவாசத்தை, உயிர் மூச்சை நாம் பெற்றிருக்கிறோம். அந்த மூச்சை, அந்த சுவாசத்தை தேவன் திரும்ப வாங்கிக் கொண்டால் அவைகள் மண்ணுக்கு திரும்பும். **சங் 104:29-ல் நீர், உமது முகத்தை மறைக்க, திகைக்கும், நீர், அவைகளின் சுவாசத்தை வாங்கிக்கொள்ள, அவைகள் மாண்டு, மண்ணுக்குத் திரும்பும் என்று சொல்லப்பட்டுள்ளது** ஆகவே இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கிற என் அன்பு

சகோதரனே, சகோதரியே என்ன தான் நாம் படித்திருந்தாலும், வசதி வாய்ப்புகள் இருந்தாலும், விஞ்ஞானத்தில் வாழ்ந்திருந்தாலும், கை நிறைய சம்பாதித்தாலும் வீண் பெருமையாய், அகந்தையாய் மற்றவர்களைப் புறக்கணித்து, அற்பமாய்த் தள்ளிவிட்டு, நான் மேலானவன் என்னைப் போல யார்? உண்டு என்று சொல்லாமல், நாம் மண்ணிலிருந்து வந்தவர்கள், மண்ணுக்கே போகிறவர்கள் என்பதை மறந்து போகாமல் தேவனுக்குப் பயந்து அவரை தொழுது, அவருடைய சாயலான மனிதர்களை நேசிக்கவும், மதிக்கவும், அன்பு செலுத்தவும், உதவி செய்யவும் வாழப்பழகிக் கொள்ளுவோம். **சங் 103:14 சொல்லுகிறது நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார், நாம் மண்ணென்று நினைவு கூருகிறார்** நம்முடைய ஆட்டம், பாட்டம் எல்லாம் மனிதர்களிடத்தில் தான் எடுபடும். இவர் பெரியவர், உயர்ந்தவர், சிறந்தவர், சூப்பரானவர் என்று. ஆனால் தேவனிடத்தில் எடுபடாது. ஏனென்றால் அவர் நம்மை சிருஷ்டித்தவர். களிமண்ணினாலே பிசைந்தவர். அவருடைய சுவாசத்தை, உயிர் மூச்சை நமக்கு இரவலாக கொடுத்திருக்கிறார்.

நாம் மண்ணென்று அவர் நினைவு கூருகிறார். அவருக்கு முன்பாக நாம் அடக்க ஒடுக்கத்தோடு, அவரைப் பணிந்து, அவர் நம்மை பூமியில் ஏற்படுத்திய நோக்கத்தை உணர்ந்து, அறிந்து அவரை பயத்துடனே சேவிக்கக்கடவோம். இதை யோபு என்ற பக்தர் கண்டுபிடித்தார். **யோபு 10:9-ல் களிமண்போல என்னை உருவாக்கினீர் என்பதையும், என்னைத் திரும்பத் தூளாகப் போகப் பண்ணுவீர் என்பதையும் நினைத்தருளும் என்று,** தேவனுக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தி பணிந்து கொண்டு, அத்தனை



பாடுகள், உபத்திரவங்களிலிருந்தும் வெளியே வந்தார். மட்டுமல்ல **யோபு 28:2-ல் இரும்பு மண்ணிலிருந்து எடுக்கப்படுகிறது போல, செம்பு கற்களிலிருந்து உருக்கி எடுக்கப்படும்** இந்த மண்ணுக்குள் தான் செம்பு இருக்கிறது, பொன் இருக்கிறது, விலையேறப் பெற்ற பொக்கிஷம் இருக்கிறது. பொட்டாசியம், இரும்பு, இன்னும் நிறைய தாதுப் பொருட்கள் எல்லாம் மண்ணிலிருந்து தான் வருகிறது. ஆகவே தான் இதை உணர்ந்து அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார் **2 கொரி 4:7-ல் இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக் கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம் என்றார்.** நாம் மண்ணான சரீரத்தில் தேவனுடைய இரக்கத்தை, பாவ மன்னிப்பை பெற்றபடியால் விலையேறப்பெற்ற ஞானம், கிருபை, தேவனுடைய தயவு, இரக்கம், அபிஷேகம், ஊழியம் இவைகளைப் பெற்றிருக்கிறோம்.

நீங்கள் உயர்ந்தவர்கள், படித்தவர்கள், பரிசுத்தவான்கள், பக்தியுள்ளவர்கள், சிறந்தவர்கள் என்பதற்காக அல்ல, இது உங்களால் உண்டானதும் அல்ல தேவனுடைய ஈவு, தயவு. ஆகவே இந்த மண்பாண்டங்களில் தேவனுடைய பொக்கிஷங்களை பெற்றிருக்கிறோம். 2 கொரி 3:5-ல் எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பது போல ஒன்றை யோசிக்கிறதற்கு, நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல, எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது என்றார். ஆகவே தான் தேவன் மனிதனைப் பார்த்து மனிதனே, நீ, மண்ணாக இருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய் என்றார். போகட்டும் இந்த மண்ணிலிருந்து நாம் என்ன செய்வது?, எப்படி தேவனைப் பின்பற்றுவது?. பரலோகத்திற்குப் போவது? இந்த மண்ணினால் என்ன நன்மை என்பதைப் பார்ப்போம்.

# நாம் விதைப்பதற்கு மண் தேவை

சில விதைகள் அதிக மண்ணில்லாத கற்பாறை நிலத்தில் விழுந்தது. அதற்கு ஆழமான மண்ணில்லாததினாலே சீக்கிரத்தில் முளைத்தது. வெயில் ஏறினபோதோ, தீய்ந்து போய், வேரில்லாமையால் உலர்ந்து போயிற்று. மாற்கு 4:5,6. தேவனாகிய கர்த்தர் களிமண்ணினாலே மனிதனை சிருஷ்டித்து, அவனை ஏதேன் தோட்டத்தில் வைத்தார். தன்னோடு இருக்கவும், தன்னுடைய ஜனம் களிப்பாய் இருக்கவும் சிங்காரத் தோட்டத்தில் வைத்திருந்தார். ஆனால் பிசாசு கோப வெறி கொண்டு தான் பூமியிலே தள்ளப்பட்டதையும், தன்னுடைய மேன்மையிலே மனிதன் இருப்பதையும் கண்ட அவன் எரிச்சலடைந்து, எப்படியாவது தேவனிடத்திலிருந்து மனிதனைப் பிரிக்க வேண்டும். அவர்கள் தேவனை விட்டுப் பிரிகிற, விலகுகிற வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்று பார்த்துக் கொண்டே இருந்தான். அதினாலே ஏவாளோடே பேசி இந்த பழத்தை புசிக்கும் நாளில் நீங்கள் தேவர்களைப் போல இருப்பீர்கள் என்று ஏமாற்றியது. ஆதி 3:5-ல் சொல்லப்பட்டபடி வஞ்சித்து, ஏமாற்றி தேவ கோபத்திற்குள்ளாக்கி விட்டான். அதன் விளைவாக அவர்கள் தேவனுடைய மகிமையை இழந்து, தேவனுடைய வல்லமை, அதிகாரத்தை இழந்து, தேவ சமூகத்திலிருந்து துரத்தப்பட்டார்கள். தேவனுக்கு அருகில் இருந்தவர்கள், இப்பொழுது தூரமானார்கள், தேவ சமூகத்தை இழந்தார்கள் என்று வேதம் சொல்லுகிறது.




அப்பொழுது தான் ஆண்டவர் அவர்களுக்கு தண்டனை கொடுத்து, பிசாசைப் போல் பூமியில் தள்ளாமல் **ஆதி 3:23-ல் நீ, எந்த மண்ணிலிருந்து எடுக்கப்பட்டாயே அதே, மண்ணுக்குத் திரும்பிப் போ, அது மட்டுமல்ல, அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்தவும், சீர்படுத்தவும், செப்பனிடவும் தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார்.** பிசாசைப் போல மனிதனை சபித்து, பாதாளத்திற்குள் தள்ளாமல் அந்த தோட்டத்தை பண்படுத்தவும், சரி செய்யவும், கொத்தி எருப்போடவும், தண்ணீர் பாய்ச்சவும் வைத்தார். நீ போய் பரலோகத்திற்கு வர, பாடுபட்டு மரித்து, என் கிரியைகளை செய்து, அடிபட்டு திருந்தி, என்னுடைய பரலோக மேன்மையை தெரிந்து கொண்டு வா. என் அருமை, என் மேன்மை உனக்கு தெரியவும் இல்லை, புரியவும் இல்லை என்று ஏதேன் தோட்டத்திலிருந்து, தேவ சமூகத்திலிருந்து பூமிக்கு அனுப்பிவிட்டார். அதன் பிறகு தான் அந்த தோட்டத்தை, பரலோகத்தை, மேன்மையான இடத்தை சுடரெளி ஏந்திய கேரூபீன்களை வைத்து பாதுகாத்தார். ஒருவரும் போக முடியாதபடி ஜீவ விருட்சத்திற்கு போகும் வழியை அடைத்தார்.

அந்த வழியைத் திறக்கவும், நாம் மீண்டும் தேவனோடு இணைக்கப்படவும் தான் இயேசு இந்த பூமிக்கு இறங்கி வந்து நானே வழி, பரலோகம் போக என்னையன்றி வேறு வழியில்லை. நானே சத்தியம், நானே ஜீவன் என்று சொல்லி நமக்காக சிலுவை பாடுகளை ஏற்றுக் கொண்டு கெத்சமனே தோட்டத்தில் பலத்த சத்தத்தோடு ஜெபித்தார். **யோபு 16:18-ல் பூமியே, என் இரத்தத்தை மூடிப்போடாதே, என் அலறுதலுக்கு மறைவிடம் உண்டாகாதிருப்பதாக என்று கதறினார்** அப்பொழுது அவருடைய

வியர்வை இரத்தத் துளிகளாக பூமியிலே, மண்ணிலே விழுந்தது. **லூக்கா 22:44-ல் அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார், அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது.** அதுவரை பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும், அது உனக்கு முள்ளுகளையும், குருக்கையும் முளைப்பிக்கும் என்ற அந்த சாபத்தை மாற்றி, இனி விதைப்பும், அறுப்பும் ஒழிந்து போவதில்லை என்று நம்முடைய நிலத்தை, நம்முடைய கல்லான இருதயத்தை, நம்முடைய குடும்பத்தை பண்படுத்த ஆரம்பித்தார். இன்றைக்கு அவருடைய வித்து, கெத்சமனே தோட்டத்தில் அவர் சிந்திய இரத்தத்தின் பலன், அந்த மண்ணின் ஆசீர்வாதம், நம்மேல் இறங்கி இருக்கிறது. நம்முடைய உள்ளத்தை, தரிசு நிலத்தை, முட்பூண்டுகளை மாற்றி இருக்கிறது. எபிரே 6:7,8-ல் எப்படியெனில் தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும். முள்செடிகளையும், முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும், சபிக்கப்படுகிறதற் கேற்றதாயுமிருக்கிறது. சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு என்று சொல்லப்பட்டுள்ளது.

தரிசு நிலமாக, தண்ணீர் நிலமாக இருந்த மனிதனுடைய இருதயத்தை மண் உள்ளதாக, விதை விழுந்தால் முளைக்கிறதற்கான விளைச்சல் நிலமாக மாற்றினார். **ஓசியா 10:12-ல் நீங்கள் நீதிக்கென்று விதை விதையுங்கள், தயவுக்கொத்ததாய் அறுப்பு அறுங்கள், உங்கள் தரிசு நிலத்தைப் பண்படுத்துங்கள். கர்த்தர் வந்து உங்கள் மேல் நீதியை வருஷிக்கப் பண்ணுமட்டும், அவரைத் தேடக் காலமாயிருக்கிறது என்றார்.**




இன்றைக்கு தரிசு நிலத்தை, முள்ளுள்ள இந்த பாறை இடத்தை, அவர் சிந்திய இரத்தத்தினால் மண் உள்ள, உரமுள்ள, ஆரோக்கியமுள்ள விளைச்சலைக் கொடுக்கவும், சில விதைகள் மண்ணில் விழுந்தது, நல்ல நிலத்தில் விழுந்து, ஒன்று முப்பதும், அறுபதும், நூறு மடங்காகவும் பலன் கொடுத்தது போல தேவன் மாற்றுவார். இந்த தோட்டத்தைப் பண்படுத்தவும், பூமியிலே தங்களை சரிசெய்து கொண்டு மனம் திரும்பி, இரட்சிப்பை அடையவும், அதே மண்ணைப் பண்படுத்தவும், விளைச்சல் கொடுக்வும் தேவனுக்கு மகிமையாக வாழ்ந்து பரலோகம் போகவும் தேவன் இந்த பூமியிலே நம்மை அனுப்பினார்.

ஆகவே இந்த செய்தியை வாசிக்கின்ற என் அன்பு சகோதரனே, சகோதரியே, நான் மண்ணு தானே இனி எனக்கு என்ன இருக்கு என்று, ஏனோ தானோ என்று வாழ்ந்து விடாமல், அவருக்கு மகிமையாக ஜீவிக்கவும், நீ, மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய் என்ற வார்த்தையின்படி இந்த மண்ணிலே, இந்த பூமியிலே தேவனுக்காக பொன்னாக வாழ்ந்து, தங்கமாக வாழ்ந்து, விலையேறப்பெற்ற பாத்திரமாக, கன-த்திற்குரிய பாத்திரமாக ஜீவித்து, அவர் சரி செய்த மண்ணாக, தேவன் பயன்படுத்தும் மண்ணாக மாறுங்கள். இதற்குத்தான் நீ மண்ணாய் இருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய் என்றார். நம்மை இந்த பூமியிலே விலையேறப்பெற்ற பாத்திரங்களாக மாற்றியிருக்கிறார். வேதம் சொல்லுகிறது **2 தீமோத் 2:20-ல் ஒரு பெரிய வீட்டிலே பொன்னும், வெள்ளியுமான பாத்திரங்களுமல்லாமல், மரமும், மண்ணுமான பாத்திரங்களுமுண்டு, அவைகளில் சில கனத்திற்கும், சில கனவீனத்திற்குமானவைகள் என்றார்.** நாம் கனவீனமாய் போகாதபடிக்கு கனத்திற்குரிய எஜமானுக்கு உபயோகமான பாத்திரமாய் மாற வேண்டும். நம்மை தாழ்த்தி

ஏசாயா 64:8 சொல்லுகிறது போல இப்பொழுதும் கர்த்தாவே, நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண். நீர் எங்களை உருவாக்குகிறவர் என்ற வார்த்தையின்படி இந்த களிமண்ணாகிய நம்மை அவருக்குப் பிரயோஜனமாக மாற்றி மகிமையடைவாராக. அதற்குத்தான் இந்த மண்ணை இந்த பூமியிலே உயிரோடே வைத்திருக்கிறார்.

## மண்ணினாலே பலிபீடம்

மண்ணினாலே பலிபீடத்தை எனக்கு உண்டாக்கி, அதின் மேல் உன் ஆடுகளையும், உன் மாடுகளையும் சர்வாங்க தகன பலியாகவும், சமாதான பலியாகவும் செலுத்துவாயாக. நான் என் நாமத்தைப் பிரஸ்தாபப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும் உன்னிடத்தில் வந்து உன்னை ஆசீர்வதிப்பேன் என்றார். யாத் 20:24. இந்த மண்ணினாலே சிருஷ்டிக்கப்பட்ட, உண்டாக்கப்பட்ட மனிதன், தேவனுக்கு மண்ணினாலே ஒரு பலிபீடத்தைக் கட்ட வேண்டும். பொன்னினாலோ, தங்கத்தினாலோ, சில்வரினாலோ, மரத்தினாலோ, சித்திர வேலையினாலோ கட்டாமல், கற்கள் பளிங்குகளினால் கட்டாமல் மண்ணினாலே அதாவது உடைகிறதாக, நொறுங்குகிறதாக இருக்க வேண்டும் என்றார். அப்படி என்றால் நம்முடைய உடல் தான், சரீரம் தான் மண். இந்த மண்ணிலிருந்து உடைத்து, உருவாக்கப்பட்ட குணத்திலிருந்து, சுபாவத்திலிருந்து தேவனுக்கு ஒரு பலிபீடம் கட்ட வேண்டும். அது பணத்தினாலோ, பளிங்குனாலோ அல்ல, நாம் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, இரட்சிக்கப்பட்டு அதினால் உண்டாகிற மாற்றம், சுபாவம், குணங்கள், தேவனுடைய கிரியைகளால் அவருக்கு பலிபீடம் கட்ட வேண்டும். அதை கட்டுகிறவர் தேவன். இதைத்தான் ரோமர் 9:21-ல், எரே 18:4,6 வசனத்தில் தேவன் சொல்லுகிறார். மிதியிட்ட ஒரே களிமண்ணினாலே குயவன் ஒரு பாத்திரத்தைக் கனமான காரியத்துக்கும், ஒன்றை கனவீனமான காரியத்துக்கும் பண்ணுகிறதற்கு மண்ணின் மேல் அவருக்கு அதிகாரம் இல்லையோ? என்று தேவன் கேட்கிறார். நாம் மிதிக்கப்பட்ட களிமண்ணாக, தேவன் எது சொன்னாலும் செய்கிற சுபாவம் நிறைந்தவர்களாக வாழ்கிற, வனைகிற பாத்திரமாக, அவர் திருப்புகிற பக்கமெல்லாம் செல்லுகிற பாத்திரமாக இருக்க வேண்டும். இதற்காகத்தான் மண்ணினாலே ஒரு பலிபீடத்தை கட்டுங்கள்



என்றார். இந்த மண்ணாகிய மனிதனுடைய இருதயத்திலிருந்து வருகிற துதி ஸ்தோத்திர ஜெபங்கள் தான் விலையேறப்பெற்ற பலிகள்நாம் மிதிக்கப்பட்ட களிமண்ணாக, தேவன் எது சொன்னாலும் செய்கிற சுபாவம் நிறைந்தவர்களாக வாழ்கிற, வனைகிற பாத்திரமாக, அவர் திருப்புகிற பக்கமெல்லாம் செல்லுகிற பாத்திரமாக இருக்க வேண்டும். இதற்காகத்தான் மண்ணினாலே ஒரு பலிபீடத்தை கட்டுங்கள் என்றார். இந்த மண்ணாகிய மனிதனுடைய இருதயத்திலிருந்து வருகிற துதி ஸ்தோத்திர ஜெபங்கள் தான் விலையேறப்பெற்ற பலிகள். இதைத்தான் சங் 51:17-ல் தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான், தேவனே, நொறுங்குண்டதும், நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர் என்று தாவீது ராஜா இருதயம் நொறுங்கி, உடைக்கப்பட்டு, நொறுக்கப்பட்டு தேவனால் வனைக்கப்பட்டு, சமாதானப் பலிகளை, ஒப்புரவாகுதலின் பலிகளை, மன்னிப்பின் பலியை, இரக்கத்தின் பலியை செலுத்துகிறார். இந்த

மண்ணான மனிதனுடைய ஆத்துமாவிலே, தேவனுடைய சுபாவத்தினாலே உண்டாகிற பலி தான் உயிருள்ள பலி. தேவன் ஏற்றுக்கொள்ளும் பலி. இப்படிப்பட்ட பலிகளைச் செலுத்தத்தான் நாம் பூமியில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறோம். ஆகவே தான் அப்போஸ்தலனாகிய பவுல் **ரோமர் 12:1-ல் சொல்லுகிறார் நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன் என்றார்.** நம்முடைய சரீரத்திலிருந்து, மண்ணிலிருந்து உண்டாகிற பலியே தேவனுக்கு ஏற்புடைய பலி. இதைத்தான் தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். வெறும் சிடி, டிவி-யில் பாடல்களைக் கேட்டால் போதாது. உன் வாயைத் திறந்து தேவனைத் துதிக்க, ஸ்தோத்தரிக்க வேண்டும். உள்ளத்தின் ஆழத்திலிருந்து வருகிற ஜெபமாக இருக்க வேண்டும். இன்றைக்கு இதை செய்ய முடியாமல், பலிபீடம் உடைக்கப்பட்டு, நொறுக்கப்பட்டு, ஜனங்கள் தேவனை மறந்து, இருமனமுள்ளவர்களாக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட தேசத்தையும், ஜனங்களையும் தேவன் பக்கம் திருப்பத்தான், எலியா என்ற தேவ மனிதன் வானத்திலிருந்து அக்கினியை இறங்கி வரப்பண்ணினான். அக்கினியினாலே உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம் என்றார். வணங்கா கழுத்துள்ளவர்கள், முரட்டுத்தனமானவர்கள், தேவனை மறந்தவர்கள், பாகாலைப் பின்பற்றினவர்கள் எல்லாரையும் கூடி வரச்செய்து உடைந்த பலிபீடத்தை, மறந்த பலிபீடத்தை சரி பண்ணினான்.

**1 இராஜா 18:30-33 அப்பொழுது எலியா சகல ஜனங்களையும் நோக்கி என் கிட்டே வாருங்கள் என்றான். சகல ஜனங்களும் அவன் கிட்டே வந்தபோது தகர்க்கப்பட்ட கர்த்தருடைய பலிபீடத்தை அவன் செப்பனிட்டு, உனக்கு இஸ்ரவேல் என்னும் பெயர் இருப்பதாக என்று சொல்லி, கர்த்தருடைய வார்த்தையைப்பெற்ற யாக்கோபுடைய குமாரரால் உண்டான கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே பன்னிரண்டு கற்களை எடுத்து, அந்தக் கற்களாலே கர்த்தருடைய நாமத்திற்கென்று ஒரு பலிபீடத்தைக் கட்டி, சுற்றிலும் தானியம் அளக்கிற இரண்டுபடி விதை விதைக்கத்தக்க இடமான ஒரு வாய்க்காலை உண்டாக்கினான்**

உடைந்து போன, இஸ்ரவேலர் நொறுக்கிப் போட்ட, மறந்த பலிபீடத்தை சரி செய்து, மனம் திரும்பி பொல்லாத துர்க்குணத்தை விட்டுவிட்ட மக்களை தேவன் பக்கமாக திரும்பினான். இது தான் மண்ணினால் உண்டாக்கப்பட்ட பலிபீடம். இந்த பலிபீடம் சரி செய்யப்பட்ட போது தேவன் இறங்கி அக்கினியை அனுப்பி ஜனங்களின் மேல் சுட்டெரிப்பின் ஆவியை ஊற்றினார். உடைந்த பலிபீடங்களை சரிசெய்து, சர்வாங்க தகன பலிகளையும், சமாதான பலிகளையும் செலுத்தி ஜனங்களை தேவனோடு இணைத்தான். மண்ணைப் பொன்னாக மாற்றினான். இந்த செய்தியை வாசிக்கிற என் அன்பு சகோதரனே, சகோதரியே இன்றைக்கு இந்த பூமியிலே உயிரோடிருக்கும் நாம் எல்லாம் கர்த்தரை நேசித்து, அவரை பின்பற்றி, அவருக்கு உகந்த பாத்திரமாக மாறி, திரும்ப அந்த மண்ணுக்குப் போவதற்குள் கர்த்தருக்காக என்னென்ன செய்ய முடியுமோ அதை எல்லாம் செய்யுங்கள். அப்பொழுது தேவன் உங்கள் மேல் பிரியமாயிருப்பார். உங்கள் பலிகளை ஏற்றுக் கொள்வார். இந்த மண்ணுக்குள் ஒரு பொக்கிஷத்தை வைத்து, உங்களையும், உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக. கிருபையானது உங்கள் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.




ஆகஸ்ட்
19
சனிக்கிழமை
9:00am
to 2:00pm
மதுரையில் எழுப்புதல்
உபவாச
ஜெபம்
இடம்
இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம்,
பைபாஸ் ரோடு, பழங்காநத்தம்,
PRC Depot அருகில், மதுரை
தொடர்புக்கு
94428 00449, 94980 00449
SIS.KALA VINCENTRAJ
BRO.L.VINCENTRAJ


அன்றன்றுள்ள அப்பம்
70 வது திருப்பத்தூர்
பரிசுத்த உபவாச முகாம்
ஆகஸ்ட் செப்டம்பர்
31,1,2
வியாழன் வெள்ளி சனிக்கிழமை
இடம்
அன்றன்றுள்ள அப்பம் ஜெப மண்டபம்
கிறிஸ்துகுல ஆசிரமம்
திருப்பத்தூர் மாவட்டம்
பாஸ்டர். ஆஸ்பார்ன் ஜெபத்துரை, சகோ. G.P.S ராபின்சன்,
சகோ.c. எபனேசர் பால், சகோ. L. வின்சென்ட்ராஜ்



# நீ விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை

சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள். நம்முடைய வாழ்வில் நாம் தானாக தடுமாறி, தடுக்கி விழுவதும் உண்டு, மற்றவர்களால் தள்ளப்பட்டு விழுவதும் உண்டு. **சங் 37:24—ல் அவன் விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை, கர்த்தர் தமது கையினால் அவனைத் தாங்குகிறார்** என்று வாசிக்கிறோம். இங்கே இரண்டு தரப்பினரைப் பார்க்கிறோம், விழுகிறவர்கள், தள்ளுண்டு போகிறவர்கள். இந்த இரு தரப்பினரையும் நேசிக்கிற ஒரு ஆண்டவர் இருக்கிறார். அவர் தான் இயேசு கிறிஸ்து. அவர் விழுந்தவர்களைத் தூக்கி விடுகிறார். தள்ளுண்டவர்களை அணைத்துக் கொள்கிறார்.


## விழுகை ஏன்?

தேவனால் உண்டாக்கப்பட்ட தூதர்களில் ஒருவன் லூசிபர். அவன் தேவனுக்குச் செலுத்த வேண்டிய மகிமையை, தேவனுக்குச் செலுத்த தவறிய போது, தேவனோடு இருந்தவன் கீழே விழுந்தான் **ஏசாயா 14:12—ல் அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே! ஜாதிகளை ஈனப்படுத்தினவனே, நீ தரையிலே விழ வெட்டப்பட்டாயே!.** அப்படி கீழே விழுந்தவன் நம்மைப் போன்ற சாதாரண மனிதர்களை எப்படியாவது கீழே விழப்பண்ணப் போராடிக் கொண்டிருக்கிறான். கீழ்ப்படியாமையை ஆதாம் ஏவாளுக்கு கொண்டு வந்து, அவர்களும் தேவனோடு இராதபடி கீழே தள்ளப்பட காரணமாயிருந்தான். **ஓசியா 14:1 இஸ்ரவேலே, உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்பு, நீ, உன் அக்கிரமத்தினால் விழுந்தாய்**

என்று ஓசியா தீர்க்கதரிசி சொல்லுகிறான். பாவம், அக்கிரமம் விழுகையை ஏற்படுத்துகிறது. தாவீது உரியாவின் மனைவியை எடுத்துக் கொண்டு அவனை கொலை செய்து பாவம் செய்தான். அதை ஒன்றுமில்லாதது போல் மறைத்தும் விட்டான். அதுதான் அக்கிரமம்.

**தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான் அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான் நீதி 28:13-ல் வாசிக்கிறோம்.** நாத்தான் தீர்க்கதரிசியைக் கொண்டு தேவன் உணர்த்தின போது, உடனே தன்னைத் தாழ்த்தி தேவ சமுகத்தில் ஜெபித்தான். முழுவதும் கண்ணீரோடு அறிக்கையிட்டான்.

**சங் 51:11—ல் உமது சமுகத்தை விட்டு என்னை தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளாமலும் இரும் என்றான்.**




கர்த்தருக்குப் பயப்படாமல் தேவக்கட்டளையை மீறி நடப்பது தான் பாவம். மத் 7:24-ஐ வாசித்தால் நான் சொல்லிய இந்த வசனத்தைக் கேட்டு நடக்கிறவனைக் குறித்தும், நடவாதவனைக்குறித்தும் எழுதப்பட்டிருக்கிறது. ஒன்று பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின் மேல் மோதியும் அது விழவில்லை. ஏனென்றால் அது கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. இன்னொன்று பெருமழை சொரிந்து, பெரு வெள்ளம் வந்து, காற்று அடித்து அந்த வீட்டின் மேல் மோதின போது அது விழுந்தது, விழுந்து முழுவதும் அழிந்தது. நாம் கர்த்தருடைய வார்த்தையின்படி செய்யாவிட்டால், நம்முடைய வாழ்வில் விழுந்து கிடக்கிறவர்களாய் இருக்கிறோம் **மத் 17:15-ல் ஆண்டவரே, என் மகனுக்கு இரங்கும், அவன் சந்திரரோகியாய் கொடிய வேதனைப்படுகிறான். அடிக்கடி தீயிலும், அடிக்கடி தண்ணீரிலும் விழுகிறான் என்றான். இதை லூக்கா 9:39-ல் ஒரு ஆவி அவனைப் பிடிக்கிறது, அப்பொழுது அலறுகிறான், அது அவனை நுரை தள்ள அவனை அலைக்கழித்து. அவனை கசக்கின பின்பும், அவனை விட்டு நீங்குவது அரிதாயிருக்கிறது என்றான்.** வசனம் **42-ல் அவன் சமீபித்து வருகையில் பிசாசு அவனை கீழே தள்ளி, அலைக்கழித்தது. இயேசு அந்த அசுத்த ஆவியை அதட்டி, இளைஞனை குணமாக்கி, அவன் தகப்பனிடத்தில் அவனை ஒப்புக் கொடுத்தார்** என்று வாசிக்கிறோம்.

பொல்லாத பிசாசு இதுவரை இல்லாத அளவு மக்களை அலைக்கழித்துக் கொண்டிருக்கிறான். தனக்கு கொஞ்ச காலம் மாத்திரம் தான் இருக்கிறது என்று மக்களை தன் வசப்படுத்த, நரகத்திற்கு இழுத்துக் கொண்டு போகப் போராடுகிறான். அறியாத ஜனங்கள் மாத்திரமல்ல, இயேசுவை அறிந்த குடும்பங்களிலும் பலவித போராட்டங்களை ஏற்படுத்தி, வாக்குவாதங்கள், பிரிவினைகள், குழப்பங்களை ஏற்படுத்தி, சமாதானத்தைக் கெடுக்கிறான். பிள்ளைகளை கீழ்படியாமலும், பாவத்தில் விழும்படி, முரட்டாட்டமாய் எதிர்த்து நடக்கப் பண்ணுகிறான். வியாதிகளை கொடுத்து, மனஅழுத்தங்களை ஏற்படுத்துகிறான். பண நெருக்கடிகளை கொடுத்து, இழப்புகளை ஏற்படுத்தி கண்ணீர் சிந்த வைக்கிறான். பலவித கவலைகளை எண்ணி ஜனங்கள் தேவன் மேல் விசுவாசம் வைக்காதபடி போராடுகிறன். மந்திர சூனியங்களை ஏவி குடும்பங்களை பாழாக்குகிறான். தற்கொலைகளை, கொலைகளை தூண்டுகிறான். பிசாசின் இந்த தாக்குதலில் தாக்குப்பிடிக்க முடியாமல் தடுமாறி விழுந்து கிடக்கிறவர்கள் ஏராளம். அவர்கள் இயேசுவிடம் வந்தால், அவர்களை இயேசுவிடம் ஜெபத்திலே கொண்டு வந்தால் விடுதலை உண்டாகும். விசுவாசத்தோடு தொடர்ந்து ஜெபியுங்கள். அப்பொழுது தான் பிசாசு உங்களை விட்டு, உங்கள் குடும்பத்தை விட்டு ஓடியே போவான். **சங் 20:7,8 சிலர் இரதங்களைக் குறித்தும், சிலர் குதிரைகளைக் குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள். நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே**

**மேன்மை பாராட்டுவோம். அவர்கள் முறிந்து விழுந்தார்கள், நாங்களோ எழுந்து நிமிர்ந்து நிற்கிறோம் என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான்.** சுயபெலத்தைக் குறித்தும், நம்மிடத்தில் உள்ளவைகளைக் குறித்தும் மேன்மை பாராட்டுதல் நம்மை விழவைக்கிறது. தங்களைப் பற்றியும், தன்னுடைய மேன்மைகளை எண்ணி, பெருமை பாராட்டுகிறவர்கள் விழுவார்கள். நாங்களோ எங்கள் தேவனைக் குறித்தே மேன்மை பாராட்டுவோம். நாம் விழாமல் இருக்க, அல்லது விழுந்தவர் எழுந்திருக்க, தேவனைக் குறித்து மாத்திரம் மேன்மை பாராட்டுவோம்.


**சாத்ராக் மேஷாக் ஆபேத்நேகோ என்னும் மூன்று புருஷரும் கட்டுண்டவர்களாய் எரிகிற அக்கினி சூளையின் நடுவிலே விழுந்தார்கள். தானி 3:23-ல் வாசிக்கிறோம்.** கர்த்தரைக் குறித்து மேன்மை பாராட்டின அவர்கள் எழுந்து நிமிர்ந்து நின்றார்கள். **மீகா 7:8,9-ல் என் சத்துருவே, எனக்கு விரோதமாய்ச் சந்தோஷப்படாதே, நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன். நான் இருளிலே உட்கார்ந்தால், கர்த்தர் எனக்கு வெளிச்சமாயிருப்பார். நான் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்தேன். அவர் எனக்காக வழக்காடி என் நியாயத்தை விசாரிக்கும் மட்டும் அவருடைய கோபத்தைச் சுமப்பேன். அவர் என்னை வெளிச்சத்திலே கொண்டு வருவார். அவருடைய நீதியை பார்ப்பேன் என்று தீர்க்க-தரிசி சொல்லுகிறான்.**



எத்தனை முறை சத்துரு, நம்மை இடறப்பண்ணினாலும், நம்மைத் தாழ்த்தி தேவனிடத்தில் திரும்பினால் அவர் மன்னிக்கிறவர். இரங்குகிறவர் மன்னித்து விடுவார், இரங்கி விடுவார் என்று துணிந்து செய்வதால் சத்துருவினால். மோசம் போகப்பட்டு இடறிப்போய் விட்டேன். தேவனே எனக்கு இரங்கும் என்பது தான் சரியான வழியாயிருக்கும். **நீதி 24:16—ல் நீதிமான் ஏழு தரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான் என்று வாசிக்கிறோம் தேவன் நம்மை எழுப்புவார். பிர 4:9,10-ல் ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம். அவர்களுடைய பிரயாசத்தினால் அவர்களுக்கு நல்ல பலனுண்டாகும். ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கி விடுவான். ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ, அவனைத் தூக்கி விடத் துணையில்லையே என்று ஞானி சொல்லுகிறான்.** இந்த கடைசி நாட்களில் ஒருமணம், ஐக்கியத்தைத் தான் சாத்தான் திருடுகிறான். கணவன், மனைவி, பெற்றோர்,பிள்ளைகள், சகோதர சகோதரிகள், உறவுகள், போதகர், விசுவாசி, வேலை ஸ்தலங்களில், தேசங்களில், பல சூழல்களில் பிரிவுகளை ஏற்படுத்தி களைகளை விதைத்து, பிரயாசத்தின் பலனை இழக்கச் செய்கிறான். தனித்து ஒண்றியாய் இருக்கப் பண்ணுகிறான். நான் உண்டு, என் வேலை உண்டு, நான், என் குடும்பம், என் பிள்ளைகள், என் வேலை என்று தனித்துவத்தை, தனிமையை உண்டு பண்ணுகிறான்.

முற்காலத்தில் கூட்டுக் குடும்பம் பல இடங்களில் இருந்தது. சில காரணங்களால் தனியே இருக்கும் நிலை வந்தாலும், எல்லாருக்கும் எல்லாக் குறை, நிறைகளும் தெரியும். ஒருவரால் ஒருவர் தூக்கி விடப்பட்டு, பெலப்படுத்தப்பட்டார்கள். இன்றைக்கு அதை காண முடியவில்லை. இக்கால விலைவாசி உயர்வு சூழல்கள் அதற்கு ஒரு காரணமாக இருந்தாலும், நாம் ஒண்டியாய் இருந்தால், துணை இல்லாமல் இருந்தால் விழுகை

வந்துவிடும். அதனால் தான் ஆண்டவர் இயேசு உங்களை திக்கற்றவர்களாய் விடமாட்டேன், உங்களிடத்திற்கு வருவேன் என்று தமது பரிசுத்த ஆவியாகிய துணையாளரை அனுப்புவேன், தருவேன் என்றார். துணையில்லாமல் நாம் இருக்கக் கூடாது, பரிசுத்த ஆவியானவரே என் உள்ளத்தில், வாழ்க்கையில் வாரும் உம்மை நான் ஏற்றுக்கொள்கிறேன், விசுவாசிக்கிறேன் என்று வாஞ்சையோடு கேட்டால் அவர் நமக்குள் வருவார். நம்மை விழாமலும், தவறினால் தூக்கி எடுக்கவும் கூடவே இருப்பார். **சங் 145:14-ல் கர்த்தர், விழுகிற யாவரையும் தாங்கி, மடங்கடிக்கப்பட்ட யாவரையும் தூக்கி விடுகிறார்.** எனவே கர்த்தரை துணையாக கொள்ளுங்கள். நல்ல ஆவிக்குரிய சகோதரிகளைக் கண்டுபிடித்து ஐக்கியமாயிருங்கள். ஆவிக்குரிய கூட்டங்களைக் கண்டு பிடித்து ஐக்கியம் கொள்ளுங்கள் நீங்கள் கைவிடப்படுவதில்லை. **ஏரே 8:4-ல் நீ, அவர்களை நோக்கி விழுந்தவர்கள் எழுந்திருக் கிறதில்லையோ? வழிதப்பிப் போனவர்கள் திரும்புகிறதில்லையா? என் ஜனம் வழிதப்பியே போகிறதே என்று ஆண்டவர் மனம் வருந்துகிறார்.** இன்றைக்கு நம்மை அன்போடு அழைக்கிறார். நீ விழுந்து விட்டாயா? வழி தப்பிப்போய் விட்டாயா? என்னிடத்தில் திரும்பு, உன்னை நான் மீட்டுக் கொண்டேன் என்கிறார். யோபு பக்தனுடைய வாழ்விலே சோதனைகள் வருவதற்கு முன்பு அநேகரை பெலப்படுத்திருக்கிறான். **யோபு 4:3,4-ல் யோபுவின் நண்பர்கள் நீர், அநேகருக்கு புத்திச் சொல்லி இளைத்த கைகளைத் திடப்படுத்தினீர். விழுகிறவனை உம்முடைய வார்த்தைகளால் நிற்கப்பண்ணி, தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்தினீர் என்கிறார்கள்.** சாதாரண மனிதனே விழுகிறவனை வார்த்தையால் தூக்கி விட முடியும் என்றால், சர்வ வல்லமையுள்ள தேவனுடைய வார்த்தையால் விழுகிற யாவரையும் தூக்கி எடுக்க முடியும் அல்லவா? தேவனுடைய வார்த்தையை நேசித்து வாசியுங்கள். அந்த வார்த்தை உங்களை தூக்கி எடுத்து நிறுத்தும்.



## தள்ளப்பட்ட உன்னை கர்த்தர் அழைத்தார்

நல்ல மனுஷன் கீழே விழுந்தாலும் தள்ளுண்டு போவதில்லை. ஒரு வேளை தன்னுடைய தவறுகளினாலே தள்ளப்பட்டவர்களை ஆண்டவர் என்ன செய்தார். **ஏசா 54:6-ல் கைவிடப்பட்டு மனம் நொந்தவளான ஸ்திரீயைப்போலவும் இளம்பிராயத்தில் விவாகம் செய்து, தள்ளப்பட்ட மனைவியைப் போல இருக்கிற உன்னைக் கர்த்தர் அழைத்தார் என்று உன் தேவன் சொல்லுகிறார். தள்ளப்பட்ட மனைவியைப் போல இருக்கிற உன்னைக் கர்த்தர் அழைத்தார்.** அகாஸ்வேரு ராஜாவுக்கு வஸ்தி மனைவியாய் இருந்தாள். ராஜா அரண்மனையில் வந்திருக்கும் விருந்தினர்களிடம் மகா ரூபவதியாய் இருந்த

அவளை காண்பிக்கும்படி அழைத்தான். அவளோ வராமல் மறுத்துவிட்டாள். ராஜாவின் கட்டளையை மீறினதும் இல்லாமல், அவள் அங்கே தனியே விருந்தும் செய்தாள். அது எதைக் குறிக்கிறது என்றால் தேவசித்தத்தைச் செய்து, ராஜ கட்டளையை நிறைவேற்றுவதற்கு பதிலாக தானே விருந்து செய்து கொண்டு மீறி நடந்ததால் இனி ராஜசமுகத்திற்கு அவள் வரக்கூடாது என்று தள்ளப்பட்டாள். அவள் இடத்தில் தான் எஸ்தர் வருகிறாள் என்று எஸ்தர் முதல் அதிகாரத்தில் வாசிக்கிறோம். தள்ளப்பட்ட மனைவிக்கு அன்று இரக்கம் கிடைக்கவில்லை. இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்த பின்பு தான் இந்த இரக்கத்தை நாம் பெற்றுக் கொள்கிறோம். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நம்மைக் கழுவி, நம்முடைய மீறுதல்களைக் கார்மேகத்தைப் போல களைந்து விட்டு நம்மை சேர்த்துக் கொள்கிறார். **லூக் 9:22-ல் இயேசு தம்மைப்பற்றி மேலும் மனுஷகுமாரன் பல பாடுகள் படவும், மூப்பராலும், பிரதான ஆசாரியராலும், வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்படவும், கொல்லப்படவும் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்திருக்கவும் வேண்டும் என்று சொன்னார். லூக் 17:25-லும் அதற்கு முன்பு அவர் அநேகம் பாடுபட்டு இந்தச் சந்ததியினால் ஆகாதவனென்று தள்ளப்பட வேண்டியதாயிருக்கிறது என்றார்.** நமக்காக, நாம் தள்ளப்பட்டவர்களாய் போகக் கூடாதபடி இயேசு ஆகாதவராய் தள்ளப்பட்டார். அதினிமித்தம் தள்ளப்பட்டு போன, ஆகாதது என்று புறக்கணிக் கப்பட்டவர்களுக்கு இரக்கம் உண்டாகிறது. யோனா, தேவனாகிய கர்த்தரிடத்தில் மிகுந்த பயபக்தியுள்ளவன். ஆனால் அவர் சமூகத்தினின்று ஓடிப்போகிறவன். **யோனா 2:4 நான் உமது கண்களுக்கு எதிரே இராதபடிக்குத் தள்ளப்பட்டேன். ஆகிலும் இன்னும் உம்முடைய பரிசுத்த ஆலயத்தை நோக்குவேன் என்றேன்** என்கிறான். யோனாவும் தேவசத்திற்குக் கீழ்ப்படியாத மனிதன் தான். ஆனால் வஸ்தியைப் போல ராஜசமுகத்திற்கு வராதவனல்ல. தேவன் அவனுக்கு நினிவேக்கு போகும் வேலையை கொடுத்த போது அவன் தர்ஷீசுக்கு ஓடிப்போனான். அதினிமித்தம் கப்பலில் இருந்து, கடலில் தள்ளப்பட்டான். அது கடலில் அல்ல, கர்த்தருடைய பார்வைக்கு எதிரே இராதபடி தள்ளப்பட்டான் என்று அவனே சொல்லியிருக்கிறான். ஆனால் பாருங்கள், ஆகிலும் இன்னும் உம்முடைய பரிசுத்த ஆலயத்தை நோக்குவேன். தள்ளப்பட்ட என்னை கர்த்தர் அழைப்பார் என்று அவரையே நோக்கிக் கொண்டிருந்தான். நாமும் எப்படித் தள்ளப்பட்டு இருந்தாலும் கிறிஸ்துவையே நோக்கிப் பார்த்தால் பிழைப்போம்.

தாவீது **சங்கீதம் 31:22-ல் உம்முடைய கண்களுக்கு முன்பாக இராதபடிக்கு வெட்டுண்டேன் என்று நான் என் மனக்கலக்கத்திலே சொன்னேன். ஆனாலும் நான் உம்மை நோக்கிக் கூப்பிட்ட போது, என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்டீர் என்கிறான்.** ஆண்டவரின் முகம் மறைக்கப்படுவது போல, அவரது பிரசன்னத்தில் நிற்க முடியாதது போல தண்டனை எதுவும் இல்லை **சங்கீதம் 64:8-ல் அவர்கள் தள்ளப்பட்டு, கீழே விழும்படி அவர்கள் நாவுகளே அவர்களைக் கெடுக்கும். அவர்களைக் காண்கின்ற யாவரும் ஓடிப்போவார்கள் என்று** துன்மார்க்கனைப் பற்றி எழுதப்பட்டு இருக்கிறது



**தானியேல் 4:30-ல் இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமை பிரதாபத்துக்கென்று ராஜ்யத்துக்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று சொன்னான்.** இந்த வார்த்தை அவன் வாயில் இருக்கும் போதே நேபுகாத்நேச்சார் மனுஷரினின்று தள்ளப்பட்டார். **தானியேல் 5:20 சொல்லுகிறது அவருடைய இருதயம் மேட்டிமையாகி, அவருடைய ஆவி கர்வத்தினாலே கடினப்பட்ட போது, அவர் தமது சிங்காசனத்திலிருந்து தள்ளப்பட்டார். அவருடைய மகிமை அவரை விட்டு அகன்று போயிற்று.** ஆனால் யோனாவை போலவே நேபுகாத் நேச்சாரும் கண்களை வானத்துக்கு ஏறெடுத்து விட்டான். என்றென்றைக்கும் ஜீவித்தி ருக்கிறவரை புகழ்ந்து உயர்த்தினான். அவன் புத்தியும், மகிமையும், ராஜ்யபாரத்தின் மேன்மையும், அவன் முகக்களையும் அவனுக்குத் திரும்ப வந்தது. அவன் திரும்ப ஸ்திரப்படுத்தப் பட்டான். தானி 4:34-37-ல் வாசிக்கிறோம்.



**நெகேமியா 1:9-ல் நீங்கள் என்னிடத்தில் திரும்பி, என் கற்பனைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படி செய்வீர்களானால், உங்களிலே தள்ளுண்டு போனவர்கள், வானத்தின் கடையாந்திரத்தில் இருந்தாலும், நான் அங்கேயிருந்து உங்களைச் சேர்த்து, என் நாமம் விளங்கும்படி நான் தெரிந்த கொண்ட ஸ்தலத்துக்கு அவர்களைக் கொண்டு வருவேன் என்றும், தேவரீர் உம்முடைய தாசனாகிய மோசேக்கு கட்டளையிட்ட வார்த்தையை நினைத்தருளும்** என்று நெகேமியா ஜெபித்தது போல, நாம் ஜெபிப்போமானால் நம்மையும் ஆண்டவர் சேர்த்து கொள்ளுவார்.

**ஏசாயா 56:8-ல் ஆண்டவர், இஸ்ரவேலிலே தள்ளுண்டவர்களைச் சேர்க்கிற கர்த்தராகிய ஆண்டவர் அவனிடத்தில் சேர்க்கப் பட்டவர்களை யல்லாமல் இன்னும் அவனிடத்தில் சேர்ப்பேன் என்கிறார்.** அவரே தள்ளுண்டவர் களைச் சேர்க்கிறவர். **எரேமியா 30:17-ல் அவர்கள், உன்னை விசாரிப்பாரற்ற, சீயோன் என்று சொல்லி, உனக்குத் தள்ளுண்டவள் என்று பேரிட்டபடியால், நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி, உன் காயங்களை ஆற்றுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.** இதுவரை உனக்கு தள்ளுண்டவள், அவளுக்கு யார் இருக்கிறார்கள், அவளைப் பற்றி கேட்க, விசாரிக்க ஒருவரும் இல்லை என்று சொல்வதால், நான் உன்னை சேர்த்துக் கொள்ளுவேன், உன் காயங்களை ஆற்றுவேன் என்கிறார் ஆண்டவர். கீழே விழுந்தாலும், தள்ளுண்டு போவதில்லை. தள்ளுண்டு போனவர்களையும் கைவிடாமல் கூட்டிச் சேர்த்துக் கொள்ளுகிற ஆண்டவர் இயேசு உங்களை ஆசீர்வதிப்பாராக!.

# ONE SOUL AT A TIME

## ஒவ்வொரு மணித்துளிக்கும் ஒரு ஆத்துமா

1 மணித்துளி
ஆத்துமா
ரூபாய்



இந்த உன்னதமான சுவிசேஷ ஊழிய
திட்டத்தில் எங்களோடு
இணைந்து சுவிசேஷ ஒளியை
பரவச்செய்யுங்கள்!

ஒவ்வொரு
மணித்துளிக்கும் ஒரு ஆத்துமா என்றால்
ஒரு மாதத்திற்கு 744 மணிநேரம்.

மாதத்திற்கு
1000, 2000, 5000, 10,000
ஆத்துமாக்களை
தாங்கிட முன் வாருங்கள்!!

மாதந்தோறும் உங்களால் முடிந்த
காணிக்கைகளை கொடுத்து இந்த
கடைசிக்கால சுவிசேஷ பணியை
தாங்க முன்வாருங்கள்!

-Gpay

இணையதளம்
மூலமாக தாங்கிட

jesuslives.in/donate



# கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்

சகோதரி. பிரேமாடேவிட்


கிறிஸ்துவில் அன்பான வாலிபத்தம்பி, தங்கைகளே சிலுவையில் நமக்காக, நம்முடைய விடுதலைக்காக செய்ய வேண்டிய அனைத்தையும் செய்து முடித்தவராகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

**எனக்கு யார் உண்டு (சங் 73:25,26) என்று தாவீதைப் போல கலங்கி நிற்கிறீர்களா?** எனக்காக செய்ய, சுகம் கொடுக்க யார் இருக்கிறாங்க என்று கூவிக்கொண்டும், புலம்பிக் கொண்டுமிருக்கிறீர்களா? **தேவரீர் என் காரியத்தை மேல் போட்டுக் கொண்டு, (ஏசாயா 38:14) எனக்காக பிணைப்படுவீராக, வேறே யார் எனக்கு கை கொடுக்கத்தக்கவர்? என்று யோபுவைப் போல (யோபு 17:3)** ஆண்டவரைப் பார்த்து விடுதலைக்காக கதறிக்கொண்டிருக்கிறீர்களா? உங்களைப் பார்த்து தான் ஆண்டவர் சொல்லுகிறார் நான் உனக்காக யாவையும் செய்து முடிப்பேன் என்று. அப்படியே நம்பின **தாவீது எனக்காக யாவையும் செய்து முடிக்கப்போகிற தேவனாகிய உன்னதமான தேவனை நோக்கி கூப்பிடுவேன் (சங் 57:2) என்று கூப்பிட்டார்.** நீங்களும் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள், சொல்லுங்கள் கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் என்று.

## கர்த்தர் எனக்காக ஏன் செய்கிறார்

நான் கர்த்தர் நான் மாறாதவர். மல் 3:6 நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன். யோவான் 14:6

கர்த்தர் என்றால் உரிமையாளர், எஜமான். அகில உலகத்திற்கும் சொந்தக்காரராகிய ஆண்டவர் இயேசு என்னைப் பாவத்திலிருந்தும், பாவத்தின் தண்டனையிலிருந்தும், நோய், பேய் அனைத்தினின்றும் என்னைக் காப்பாற்றுவதற்காக, தன்னுடைய உயிரையே, இரத்தத்தையே விலைகிரயமாய் கொடுத்து, என்னை அவருடைய சொந்தமாக சாத்தானிடமிருந்து மீட்டுக் கொண்டதால், வாங்கிக் கொண்டதால் தான் அவர் எனக்காக செய்கிறார். எனக்காக இயேசு சிலுவையில் மரித்தாரே, இனி நான் அவருக்குத் தான் சொந்தம்.



இனி நான் அவருக்காகத் தான் வாழ்வேன் என்று என்றைக்கு யார் தங்கள் உள்ளத்தில் இயேசுவுக்கு இடம் கொடுத்தார்களோ, ஏற்றுக் கொள்கிறார்களோ அன்றிலிருந்து அவர்கள் அவருக்குரியவர்களாக ஆனபடியினாலே, அவர் அவர்களுக்காக யாவையும் செய்கிறார்.

உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும், உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரையத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே, ஆகையால் தேவனுக்கு உடையவர்களாகிய உங்கள் சரீரத்தினாலும், உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள் 1 கொரி 6:19,20. நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள் 1 கொரி 3:23.

இதை வாசிக்கின்ற நீங்களும் இயேசுவை உங்கள் சொந்த தகப்பனாக இன்றே ஏற்றுக் கொண்டால் உங்களுக்காக அவர் யாவையும் செய்து முடிப்பார். என்னை நேசிக்க ஒருவருமில்லை என்று இனி நீங்கள் ஏங்க வேண்டியதில்லை. அவரே உங்கள் நேசராக, சிநேகிதராக இருந்து உங்களை நடத்துவார். சூலமித்தியாள் சொல்லுவது போல என் நேசர் என்னுடையவர். நான் அவருடையவள் என்று (உன் 2:16, 6:3) நீங்களும் சொல்ல முடியும். தாவீதும் கூட சொல்லுகிறார் கர்த்தர் என் மேய்ப்பரா யிருக்கிறார் (சங் 23:1) என்று. இயேசுவே நீர் என்னை உம்முடைய பிள்ளையாக ஏற்றுக்கொள்ள விலை கொடுத்து விட்டீர், இனி நான் எனக்குச் சொந்தமில்லை, என் உள்ளத்திலே வாரும், என்னை உம் விருப்பப்படி வழி நடத்தும் என்று நீங்கள் சொன்னால் போதும். வானம் பூமி அனைத்துக்கும் உரிமையாளராகிய இயேசு உங்களுக்கு உரிமையாளராகி, சொந்தமாகி நீ என்னுடையவன் (ஏசாயா 43:1) என்று உங்களுக்காக யாவையும் செய்வார்.

## கர்த்தர் செய்யும் யாவையும் என்பது என்ன?

நீ என்னுடையவனாய், என்னுடையவளாய் இருக்கும் போது உனக்காக நான் Extra

மட்டுமல்ல Excetra - வாகத் தருவேன். அதைத் தான் யாவையும் செய்து முடிப்பேன் என்கிறார். **கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் (மத் 7:7) முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும். (மத் 6:33) Extra, கூடவும் கொடுக்கப்படும். கூட மட்டுமல்ல நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும், அதிகமாய் கிரியை செய்ய வல்லவர் (எபே 3:20).** மிகவும் அதிகமாய் உங்களுக்குச் செய்வார். மிகவும் அதிகமாய் மட்டுமல்ல **எனக்கு குறித்திருக்கிறதை அவர் நிறைவேற்றுவார். இப்படிப்பட்டவைகள் இன்னும் அநேகம் அவரிடத்தில் உண்டு.** நீங்கள் கேட்கும், கேட்காத அனைத்தையும், தேவையான அனைத்தையும், இது அது என்று சொல்லும் அளவிற்கு யாவையும் தந்து உங்களை ஆசீர்வதிப்பார். **ஏனென்றால் உங்களை ஆசீர்வதிப்பதே அவருக்குப் பிரியம் (எண் 24:1). சாலொமோன் ஞானத்தைத் தான் கேட்டார், ஆனால் ஆண்டவர் ஞானத்தை**



**தருகிறேன், இதுவுமன்றி நீ, கேளாத ஐஸ்வரியத்தையும், மகிமையையும் உனக்குத் தந்தேன். உன் நாட்களில் இருக்கிற இராஜாக்களில் ஒருவனும் உனக்கு சரியானவன் இருப்பதில்லை. 1 இராஜா 3:13.** பேதுருவிடம் வரி வசூலிக்கிறவர்கள் உங்கள் போதகர் வரி செலுத்துகிறதில்லையா? என்று கேட்டார்கள் செலுத்துகிறார் என்றான். அவன் வீட்டிற்குள் வந்த போது அவன் பேசுகிறதற்கு முன்னமே இயேசு அவனை நோக்கி நீ, கடலுக்குப் போய் தூண்டில் போடு முதலாவது அகப்படுகிற மீனைப்பிடித்து அதின் வாயைத் திறந்து பார். ஒரு வெள்ளிப்பணத்தைக் காண்பாய் அதை எடுத்து எனக்காகவும், உனக்காகவும் அவர்களிடத்தில் கொடு என்றார் (மத் 17:27). நீங்கள் வேண்டிக் கொள்வதற்கு முன்னமே (மத் 6:6) நீங்கள் கூப்பிடுகிறதற்கு முன்னே (ஏசாயா 65:24) ஆண்டவர் உங்களுக்குத் தருவார். ஆவிக்குரிய காரியங்கள், பொருளாதாரக் காரியங்கள், படிப்பு, வேலை, திருமணம், சுகம் Extra மட்டுமல்ல Excetra-வாகத்தந்து யாவையும் செய்து முடிப்பார். எனவே எதைக் குறித்தும் கலங்காமலும் பயப்படாமலும் **கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்** என்று சொல்லுங்கள்

Computer Application-ல் 100/100 Total - 560 மார்க் எடுத்த ஒரு பெண்ணிற்று அவள் விரும்பும் Computer Application Major கிடைக்கவில்லை. சிபாரிசிலும் கிடைக்க வாய்ப்பில்லாத நேரத்திலும் கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் என்ற இந்த வசனத்தைச் சொல்லி ஜெபித்தார்கள். அற்புதமாக எந்த Recommand-ம் இல்லாமல் அந்த மகளுக்கு Seat கிடைத்தது. இது போல எத்தனையோ..... தேவன் உங்களுக்காகவும் செய்வார்.

உங்களைச் சுற்றி பிரச்சனைகள், தீமைகள் இருந்தாலும் அவை அணுகாதபடி உங்களைக் காப்பதற்காக யாவையும் செய்வார் **தீங்கின் காலத்திலும், நெருக்கத்தின் காலத்திலும் உனக்காக நான் சத்துருவுக்கு எதிர்பட்டு உனக்குச் சகாயஞ்செய்வேன் என்கிறார். எரே 15:11.** எனவே பயப்படாமல் தொடர்ந்து நம்பிக்கையாயிருங்கள், கர்த்தர் தாமே உங்களுக்காக யாவையும் செய்து முடிப்பாராக. ஆமென்.

# செல்லப்பிள்ளை தீனாள்

## ஹலோ, குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா?

முந்திக் காலத்தில் யாக்கோபுனு ஒரு அப்பா இருந்தாங்க. அவங்களுக்கு 12 பையன்களும், ஒரே ஒரு பெண் பிள்ளையும் இருந்தாங்க. ஒரே ஒரு பெண் பிள்ளைங்கிறதினால் அவளுக்கு ரொம்ப செல்லம். யாக்கோபு இப்பத்தான் புதுசா ஒரு இடத்தில் வந்து குடியிருந்ததினால் வெளியே எங்கேயும் போகக் கூடாது. யார் கூப்பிட்டாலும் போகக்கூடாது, நமக்கு எல்லாருமே புதுசா இருக்காங்க. நம்மளத் தெரியாதவங்க ஏதாவது கொடுத்த வாங்கிச் சாப்பிடக் கூடாது என்று நம்ம அப்பா அம்மா மாதிரியே அவுங்க வீட்டிலேயும் கண்டிஷன் எல்லாம் போட்டாங்க.

ஆனா இந்த தீனாள் தான் செல்லமாச்சே, வெளியே போயிட்டு வந்து அப்பா கிட்ட சொல்லிட்டா ஒன்னும் சொல்லமாட்டார், அம்மா கிட்ட சாரி சொல்லிட்டா அவங்களும் விட்டிடுவாங்க என்று கொஞ்சமல்ல ரொம்ப தைரியமா, அந்த புது ஊரைச் சுற்றிப் பார்க்க போனாங்க. ஐயோ, அந்த ஊரின் பையன்களும், பிள்ளைகளும் கெட்ட நடத்தையும், குணமுள்ளவர்களாக இருந்தார்கள். அவளுக்கு கெடுதல் செய்தார்கள்.



அதை அவங்க அண்ணன்கள் இரண்டு பேர் கேள்விப்பட்டு, அவங்களோடு சண்டைக்குப் போனாங்க. அப்பாவுக்கே ரொம்ப வேதனை ஒரு பக்கம், தன் ஒரே செல்ல மகளை நினைத்து மற்றொரு பக்கம், அவுங்க அண்ணாங்க சண்டை போட்டதால அப்பா பேரே கெட்டுப்போயிச்சு.

குட்டி தம்பி, தங்கை ஆண்டவர் சொல்றத, அப்பா, அம்மா சொல்றத அப்படியே கேட்டு நடக்கனும், அப்பத்தான் நீங்க நல்லாயிருக்கலாம். யாரும் உங்களை கெட்ட நோக்கத்தோடு, தொடவோ, பேசவோ மாட்டாங்க. என்ன குட்டீஸ் அப்பா அம்மா அனுமதி இல்லாமா (ஊரைச் சுற்றிப் பார்க்கிறோன்னு) வெளியே எங்கேயும் போகாதீங்க. நேரிலோ, போனிலோ, சேட்டிங்கிலோ பேசாதீங்க என்ன. இயேசப்பா செய்ய சொல்றதைக் கேட்டு அப்படியே நடந்து கொள்ளுங்க. **Ok bye** குட்டீஸ்.

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா தீனாள் பெற்றோர் சொல் கேட்காததினால் எவ்வளவு கஷ்டம். நானும் இதே மாதிரி செய்த தப்பையெல்லாம், கீழ்ப்படியாததையெல்லாம் எனக்கு மன்னியுங்க இயேசப்பா, இனிமே உங்க சொல்படி, பெற்றோர் சொல்படி கேட்டு நடக்க உதவி செய்யுங்கப்பா. ஆமென்.

## மனப்பாட வசனம்

பிள்ளைகளே உங்கள் பெற்றாருக்கு கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள். இது நியாயம்.

எபேசியர் 6:1



“என் பிள்ளைகள் ஒலிவமர கன்றுகள்”

# “என் பிள்ளைகள்” ஆசீர்வாத ஜெப திட்டம்





- உங்கள் பிள்ளைகளின் ஆசீர்வாதத்திற்காக, தேவ பாதுகாப்பிற்காக, படிப்பிற்காக, சுகத்திற்காக அனுதின பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்
- உங்கள் குழந்தைகளின் எதிர்காலத்திற்காலத்தை குறித்த கலக்கம் மற்றும் பயம் நீங்க.
- அவர்களை குறித்த தேவ திட்டம் நிறைவேற.
- இன்றே இணைந்திடுங்கள் !
  (வயது வரம்பு 24 வரை)

**உங்கள் பிள்ளைகளின் விண்ணப்பங்களுக்காக அனுதினமும் பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்.**

**இத்திட்டத்தில் இணைந்திட அழையுங்கள் 94428 00449, 94428 00447**

**WHATSAPP மூலம் இணைய 94980 00449**

இணையதளம் மூலமாக இணைந்திட jesuslives.in/resources



# இயேசுவை நோக்கிப் பார்த்து தங்கள் வாழ்க்கையில் பிரகாசமடைந்தவர்கள்

**சகோதரி. ஆரோக்கியமேரி - முத்தழகுபட்டி**

நான் படித்துவிட்டு வேலை இல்லாமல் கஷ்டப்பட்டேன். என் அக்கா என்னை வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெப மையத்தில் நடைபெற்ற உபவாச ஜெபத்திற்கு அழைத்து வந்தார்கள். ஜெபத்தில் கலந்து கொண்டு இயேசுப்பாவிடம் என் விண்ணப்பத்தை சொல்லிவிட்டு, ஜெபக்குறிப்பும் எழுதி கொடுத்து விட்டு, சகோதரரிடமும் ஜெபித்து விட்டுச் சென்றோம். மறுமாதமே எனக்கு வேலை கிடைத்தது இயேசப்பாவுக்கு ஸ்தோத்திரம். என் திருமண காரியத்திலும் நிறைய பேர் அலைன்ஸ் பார்த்து விட்டு செல்வார்கள். ஆனால் எதுவும் நடக்காது தடையாகவே இருந்தது. எங்கள் கையில் பணமும் இல்லை, எப்படி எனக்கு திருமணம் நடக்கும், என்ன செய்வது என்று தெரியாமல் மிகவும் வேதனையில் இருந்தோம். வானத்தின் வாசலில் வந்து ஜெபித்துவிட்டு, கர்த்தரிடத்தில் எங்கள் குடும்ப சூழ்நிலையை சொல்லிவிட்டுச் சென்றேன். அடுத்து என்னை பெண் பார்க்க தான் வந்தார்கள், ஆனால் அன்றைக்கே நிச்சயம் செய்து விட்டுச் சென்றார்கள். அடுத்த மாதமே எனக்கு திருமணமும் நடக்க தேவன் கிருபை செய்தார். ஏற்ற வாழ்க்கை துணையைத் தந்து, திருமணத்திற்கு வேண்டிய பணத் தேவைகளையும் சந்தித்து, அநேகர் பார்த்து ஆச்சரியப்படும் அளவுக்கு நேர்த்தியாக தேவன் நடத்தினார். மேலும் குழந்தைக்காக ஜெபித்த போதும் தேவன் ஜெபத்திற்கு பதில் தந்தார். எனக்கு தற்போது இரண்டு பையன்கள் இருக்கிறார்கள். வானத்தின் வாசலில் வந்து நான் இயேசுவை நோக்கி ஜெபித்த அத்தனை ஜெபத்திற்கும் தேவன் எனக்குப் பதில் தந்து என்னை சாட்சியாக வாழ வைத்திருக்கிறார். அவருக்கே கோடா கோடி ஸ்தோத்திரம்.

**சகோதரர். எரேமியா - திண்டுக்கல்**

நான் இயேசு கிறிஸ்துவை அறியாத சிலை வழிபாடு உள்ள குடும்பத்தைச் சேர்ந்தவன். என் அப்பா ஒரு பூசாரி. எனவே நானும் அதே வேலையை செய்பவனாக மாறினேன். எனக்கு ஒரு விருப்பம் இருந்தது, எப்படியாகிலும் வெளிநாடு செல்ல வேண்டும் என்று. அதன்படி நான் வெளிநாடும் சென்றேன். அங்கு போய் ஒன்றரை மாதத்திற்குள் எனக்கு ஒரு விபத்து ஏற்பட்டது. நான் வேலை பார்த்த இடத்திலிருந்து என்னை திரும்பவும் இந்தியாவிற்கு அனுப்பி விட்டார்கள். இந்தியாவிற்கு வர விமான நிலையத்தில் நான் உட்கார்ந்து இருந்த போது என் அருகில் உள்ள இருக்கைகளில் மனிதர்கள் யாரும் இல்லை. ஆனால் ஒருவர் என் அருகில் அமர்ந்திருப்பதை நான் உணர்ந்தேன். அப்பொழுது அவர் யார் என்று எனக்கு தெரியவில்லை, பின்நாட்களில் அவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தான் என்னைத் தேடி வந்திருக்கிறார் என்பதை அறிந்து கொண்டேன். சென்னைக்கு வந்த பிறகு சபைக்கு செல்ல ஆரம்பித்தேன். உண்மையாய்த் தேவனைத் தேடினேன். பூமிக்குரிய காரியங்களையும், பூமிக்குரிய நன்மைகளையும் நான் வெறுத்து, முழுவதுமாக என் வாழ்க்கையை தேவனுக்கு அர்ப்பணித்தேன். அன்றிலிருந்து இன்று வரை தேவன் பல மாநிலங்களுக்கு என்னை கொண்டு சென்று அவருடைய பணியை செய்ய வைத்திருக்கிறார். கடந்த ஆறு மாதங்களாகத் தான் நான் வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெபமையத்திற்கு வருகிறேன். இங்கு வந்து பிறகு நான் ஆறுமாதத்திற்குள் 25 ஆயிரம் பேருக்கு சுவிசேஷத்தை சொல்ல தேவன் கிருபை செய்தார். கடந்த மே மாதத்தில் வடஇந்தியாவில் ஒரு மாநிலத்தில் ஊழியம் செய்ய முதலில் என்னை அழைத்தார்கள். பிறகு மே மாதம் முழுவதும் 5 மாநிலங்களில் தேவனை அறியாத மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க தேவன் அநுக்கிரகம் செய்தார். என்றைக்கு நான் பூமிக்குறிய காரியங்களை வெறுத்தேனோ அன்றிலிருந்து தேவன் என்னை, நான் நினைத்தே பார்க்காத அளவுக்கு உயர்த்தி, அநேகருக்கு ஆசீர்வாதமாக பயன்படுத்துகிறார். அவருக்கே மகிமை உண்டாவதாக.

இயேசு வாழ்கிறார் மீடியா துறைக்கு

# வேலைக்கு ஆட்கள் தேவை

இடம்
மதுரை
சென்னை
திண்டுக்கல்

## Available Positions :

#On Site
### MANAGER - MEDIA OPERATIONS
Should take care of the entire media operations with vast knowledge in media and digital media with latest technology implementation. Should be Expert in Team handling and the projects.

#Hybrid
### GRAPHIC DESIGNER
Should have vast knowedgle in Corel Draw,Adobe in design and illustrator. Should have the idea of print media and good work skill on digital platform desgin work as per the platforms

#Hybrid
### CONTENT WRITER
Should have a biblical knoweldge to write the content both in print media as well as in the Digital Platfoms. Excellent wrtining and communicating skill needed.

## Available Positions :

#On Site
### PROGRAM PRODUCER / DIRECTOR
Planning and creating new program as per the Inputs and need to have a vast knowledge in creating content from production to broadcasting . Knoweldge in Target Audience is a must.

#Hybrid
### VIDEO EDITOR
Should have vast knowedgle in Premire Pro, Davinci Resolve and FCP X. With creative Edit Skill using the lastest Desinging skill as per the broadcast Standard

#On Site
### SOUND ENGINEEER
Should have a work experience in Live sound Reinforcment and should handle the Aduio Studio in addtion the Live Broadcasting in realtime.

## Available Positions :

#Hybrid
### MOTION GRAPHICS DESIGNER
Should have vast knowedgle in After effects, Premiere pro and photoshop with good creative skill. Using the realtime graphics and virtual studio idea will be a plus.

#On Site
### CAMERAMAN
Should Operate the camera with lighting and audio knowledge.Ready to learn and implement the latest technology

#On Site
### PHOTOGRAPHER
Able to handle the DSLR and to work on the lightroom. Good Knowdelge with Creative Skill. Four Wheel Driving Experi-ence Needed.

Christian Candidates Having a Zeal to Work in a Christian Organisation can APPLY

**இப்பொழுது விண்ணப்பியுங்கள்**

https://jesuslives.in/careers/
OR
Email : connect@dprince.in
OR
Whatsapp : +91 7825 04 7825
OR
Whatsapp : +91 9498 00 0449

* Any UG/PG Candidates with respective Skill
* Bsc Visual Commuication or Any Media Studies or Experience in the respective Field.
* Experienced Staffs will be given Good Remuneration.
* Food And Accomodation will be provided.
* Male & Female can Apply.
* Fresher are welcomed whereas will undergo 3 months training without stipend.

# நடப்பு செய்திகள்

# சத்தமில்லாமல் கொல்லும் கல்லீரல் வீக்க நோய்: ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள 7 வழிகள்.!

குடிப்பழக்கம் அல்லாத கல்லீரல் வீக்க நோய் ஏற்படுவதற்கு இன்னொரு முக்கிய காரணம் நீரிழிவு நோய். மேலும் தற்போதைய காலத்தில் குழந்தைகளிடம் உடல் பருமன் அதிகரித்து வருவதால், அவர்களையும் இந்நோய் தாக்கக்கூடிய அபாயம் உள்ளது. நமது உடலில் கொஞ்சம் சிக்கலான உறுப்பு எது என்று கேட்டால், அது கல்லீரலாகத் தான் இருக்கும். நமது உடலில் இரண்டாவது பெரிய உறுப்பாக கல்லீரல் இருக்கிறது. இருப்பினும் இது முக்கியமான உறுப்பாகும். இரத்தத்தில் உள்ள நச்சுக்களை சுத்திகரிப்பது, செரிமானத்திற்கு உதவும் பித்த நீரை தயாரிப்பது, இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவை பராமரிப்பது போன்ற பல வேலைகளை கல்லீரல் செய்கிறது. இந்தியாவில் கல்லீரல் நோயினால் அதிகமானோர்

இறப்பதாக உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது. குடிப்பழக்கம் அல்லாத கல்லீரல் வீக்க நோய் (NAFLD) மக்களிடம் அதிகரித்து வருவதாக சமீபத்திய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உடலியல் செயல்பாடுகள் எதுவும் இல்லாமல் சோம்பேறித்தனமான வாழ்க்கை முறையும் கல்லீரல் நோய் ஏற்படுவதற்கு ஒரு காரணமாகும்.

உங்கள் கல்லீரலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள இந்த டிப்ஸை பின்பற்றுங்கள்:

- ஆரோக்கியமான, சரிவிகிதமான டயட்டை பின்பற்றுங்கள்.
- சர்க்கரை மற்றும் உப்பை அளவாக உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.
- உங்கள் உணவில் பச்சைக் காய்கறிகள் மற்றும் பழங்களை அதிகளவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.
- உங்கள் உடல் எடை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.
- ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு சீரான உடற்பயிற்சி மிகவும் அவசியமாகும்.
- முளைகட்டிய பச்சைப்பயறு, கோதுமை, கொண்டக்கடலை ஆகியவற்றை அடிக்கடி சாப்பிடுங்கள். இது உங்களின் கல்லீரலை சுத்தப்படுத்தும் தன்மை கொண்டவை.

**பூண்டு:** இது சக்திவாய்ந்த மூலிகையாகும். உணவிற்கு சுவையை கூட்டுவதோடு. தொப்பையை குறைக்கவும், உடல் எடையை குறைக்கவும், கல்லீரல் வீக்க நோயிலிருந்து உங்களை பாதுகாக்கவும் பூண்டு உதவுகிறது.

**வால்நட்:** நீங்கள் டயட்டில் இருக்கிறீர்கள் என்றால் வால்நட்டை தவிர்க்கவே முடியாது. இது உங்களுக்கு ஏற்படக் கூடிய அழற்சி, இன்சுலின் எதிர்ப்பு, ஆக்ஸிடேடிவ் அழுத்தம் ஆகியவற்றை குறைக்க வால்நட் உதவுகிறது. மேலும் இதில் இருக்கும் ஒமேகா-3 ஃபேட்டி ஆசிட் கல்லீரல் வீக்கத்திலிருந்து உங்களை பாதுகாக்கிறது.

**ஆளி விதைகள்:** இதில் அதிகளவு ஒமேகா-3 ஃபேட்டி ஆசிட் உள்ளது. இது கொழுப்பை குறைத்து கல்லீ ரலில் உள்ள கொழுப்பை மேம்படுத்துகிறது. இயற்கையாகவே ஒமேகா-3 அழற்சி நீக்கியாகும். கல்லீ ரலில் அழற்சி ஏற்படாமல் இது உங்களை பாதுகாக்கும்.

**ஓட்ஸ்:** முழு தானியம், ஓட்ஸ் போன்ற நார்ச்சத்து மிகுந்த உணவுகள் போன்றவை கல்லீரல் வீக்க நோய் வருவதிலிருந்து உங்களை பாதுகாக்கும். நார்ச்சத்து மிகுந்த ஓட்ஸ் போன்ற உணவுகளில் அதிக ஊட்டச்சத்துக்கள் உள்ளது. இது உங்கள் உடலில் உள்ள டிரை கிளிசிரைடை குறைத்து கல்லீரல் வீக்க நோயால் பாதிக்கப்படவர்களுக்கு நல்ல பலனைக் கொடுக்கிறது.

**சாலியா விதைகள்:** இந்த விதைகளில் அதிகளவு ஒமேகா-3 கொழுப்பு உள்ளது. இது கல்லீரலில் உள்ள கொழுப்பை குறைத்து கல்லீரல் வீக்க நோயாளிகளுக்கு நல்ல ஆரோக்கியத்தை தருகிறது. இதிலுள்ள ஒமேகா-3 ஃபேட்டி ஆசிட் கல்லீரலில் உள்ள கொழுப்பின் அளவை குறைத்து நல்ல கொழுப்பை (HDL கொலஸ்ட்ரால்) உடலில் அதிகரிக்கிறது.

# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார்(1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | | | |
|---|---|---|---|
| A/C NAME | : JESUS LIVES TRUST | A/C NAME | : L.VINCENT RAJ |
| BRANCH | : KOCHADAI MADURAI | BRANCH | : MADURAI |
| BANK NAME | : UNION BANK OF INDIA | BANK NAME | : AXIS BANK |
| A/C.NO | : 493902010001022 | A/C.NO | : 109010100247030 |
| IFSC CODE | : UBIN0549398 | IFSC CODE | : UTIB0001765 |

**2) இணையதளம்(WEBSITE)**
WWW.JESUSLIVES.IN

ஸ்கேன் செய்யுங்கள்

**3) காசோலை(CHEQUE)**
JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

**4) GOOGLE PAY** : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

**5) மணியார்டர்(E.M.O) :** இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ – காலனி பரவை ,மதுரை – 625 402

भारतीय डाक
India Post

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.


நம்பிக்கையின் இரவு
NIGHT OF HOPE
Bro
L.VINCENTRAJ
Sis
KALA VINCENTRAJ
ஜூலை
31
இரவு 10.30 மணி முதல் 12.30 மணி வரை
புதிய மாத ஆசீர்வாத
வாக்குத்தத்த ஜெபம்
ஆகஸ்ட்
31
இரவு 10.30 மணி முதல் 12.30 மணி வரை
உங்கள் ஜெப விண்ணப்பங்களை அனுப்புங்கள்.
உங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும்
அனுப்ப வேண்டிய எண்
944 28 00 449
நமது இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்
அனைத்து சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளத்திலும் ஒளிபரப்பாகிறது